## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 17–ம் நாளன்று 35 வது பிரதிவாதி சாட்சியாக பி.வா.சா.33–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: அருள்செல்வன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை :–**

நான் இவ்வழக்கில் 35 வது பிரதிவாதியின் கணவர் ஆவேன். என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 35 வது பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.184 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.10.2008 ஆம் தேதிய 35 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.7088/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.185 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 15.10.2025 ஆம் தேதிய ரவிசந்திரன் பெயரிலான வில்லங்க சான்றிதழ் (01.01.2006 முதல் 14.10.2025 வரை) ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.186 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. **(வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 13.11.2025 ஆம் தேதிய 35 வது பிரதிவாதி பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.187 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** கடந்த 13.11.2025 ஆம் தேதிய 77 வது பிரதிவாதி கீதா பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.188 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 87, 89 முதல் 100, 102, 104 முதல் 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டத்தில் கொள்ளம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் இடத்திற்கும் தும்பிவாடி கிராமம் சுமார் 65 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தாவா சொத்துக்கள் வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் பி.ஈ. சிவில் படித்துள்ளேன். பொதுவாக சொத்துக்கள் வாங்கும் போதும் விற்கும் போது வழக்கறிஞர் சட்டக்கருத்துரை பெற்று வாங்க அல்லது விற்க வேண்டும் என்று சொன்னால் தெரியும் வழக்கறிஞர் கருத்துரை கேட்டு தான் வாங்கியுள்ளேன். நீங்கள் எந்த காலத்திலும் சட்டக்கருத்துரை பெற்று சொத்தை வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.185 மூலம் நீங்கள் வாங்கிய

கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.185–ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நீங்கள் எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்று சொ'னனால் சரியல்ல 17 வருடமாக நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்து தும்பிவாடி கிராமத்தில் அமைந்துள்ளது. 1912 ரீ செட்டில்மெண்ட் சர்வேயில் தாவா சொத்து சர்வே எண்.26 முதல் 28 வரை ஆனூர்அம்மன் மற்றும் ஜெயங்கொண்டம்மன் கோவிலுக்கு சொந்தமானது என்று குறிப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல 1966 லிருந்து எடுத்த வில்லங்க சான்றிதழில் குறிப்பு வரவில்லை. உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.184 முதல் பி.வா.சா.ஆ.188 வரையிலான ஆவணங்கள் போலியான தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.